අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය 'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு 'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
Ministry of Education, Higher Education and Vocational Education 'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

## க.பொ.த. (உயர் தரம்) தொழிற் பாடத்துறை
## (பதின்மூன்று வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி வேலைத்திட்டம்)
## தரம் 12 இற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பம் கோருதல்- 2026/2027

உயர் தர தொழிற் பாடத்துறையின் கீழ் 2026/2027 கல்வி ஆண்டிற்காக தரம் 12 இற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதற்கமைய, தொழிற் பாடத்துறை நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலைகளுக்கு (உரிய பாடசாலைகளின் பட்டியலை இங்கே பெற்றுக்கொள்ளுங்கள்) மாணவர்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். இப்பாடத்துறைக்கு மாணவர்களை அனுமதிக்கும் போது **க.பொ.த. (சாதாரண தர) பரீட்சை பெறுபேறுகள் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.**

தொழிற் பாடத்துறையின் கீழ், **தரம் 12 இல் பாடசாலைக் கல்வியை** நிறைவு செய்து, **தரம் 13 இல்** கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொழிற் பாடங்களில் ஒன்றின் கீழ் **NVQ (தேசிய தொழிற் தகைமை) மட்டம் 4 இற்குரிய தொழிற் பயிற்சிப் பாடநெறியொன்றை** பூர்த்தி செய்வதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும்.

1. குழந்தை உளவியல் மற்றும் பாதுகாப்பு
2. சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு
3. உடற் கல்வி மற்றும் விளையாட்டு
4. அரங்கற் கலை
5. நிகழ்ச்சி முகாமை
6. கலை மற்றும் கைவினை
7. உள்ளக வடிவமைப்பு
8. நவநாகரீக வடிவமைப்பு
9. கிராஃபிக் வடிவமைப்பு
10. சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல்
11. நிலத்தோற்ற வடிவமைப்பு
12. பிரயோக தோட்டக் கலைத் தொழில்நுட்பக் கல்வி
13. கால்நடை உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி
14. உணவு உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி
15. நீர்வளத் தொழில்நுட்பக் கல்வி
16. பெருந் தோட்டப் பயிர்ச்செய்கை உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி
17. கட்டுமானத் தொழில்நுட்பக் கல்வி
18. மோட்டார் இயந்திர தொழில்நுட்பக் கல்வி
19. மின் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பக் கல்வி
20. ஜவுளி மற்றம் ஆடைத் தொழில் நுட்பக் கல்வி
21. உலோகக் கட்டுமான தொழில்நுட்பக் கல்வி
22. அலுமினிய கட்டுமான தொழில்நுட்பக் கல்வி
23. கலை மற்றும் வடிவமைப்பு
24. சுற்றாடல் கல்வி
25. கணணி வன்பொருள் மற்றும் வலையமைப்பு
26. உற்பத்தி
27. விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்
28. வழங்கல்கள் முகாமைத்துவம்

**அதற்கமைய, இதனுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை, நீங்கள் சேர விரும்பும் பாடசாலையின் அதிபருக்கு அனுப்பி வைக்க வேண்டும். அந்த விண்ணப்பப் படிவத்தை பின்வரும் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.**

இது தொடர்பான மேலதிக விபரங்களை இவ்வமைச்சின் 'அனைவருக்கும் கல்வி' கிளையுடன் தொடர்புகொள்வதன் மூலமாகவோ அல்லது இவ்வமைச்சின் இணையதளத்தின் ஊடாகவோ பெற்றுக்கொள்ள முடியும்.

கல்விப் பணிப்பாளர் (அனைவருக்கும் கல்வி)
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
இசுருபாய, பத்தரமுல்ல
0112 787136, 0112 786746, directorefa@moe.gov.lk
Web – www.moe.gov.lk
Facebook – A/L Vocational Stream (www.facebook.com/vocationalStream)

**பி. டி. எஸ். பாலசூரிய**
**கல்விப் பணிப்பாளர் (அனைவருக்கும் கல்வி கிளை)**